**செ.வெ.எண்: 22** **நாள்:23.12.2019**

<u>கரூர் மாவட்டம்</u>

<u>ஊரக உள்ளாட்சித்தேர்தல் வாக்குப்பதிவு நாள் மற்றும் வாக்கு எண்ணும் நாட்களில் மதுபானம் விற்பனை முடக்கம் செய்யப்படுகின்றது – மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>

தமிழ்நாடு அரசு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003–ன் படியும், (Tamilnadu Liquor license and Permit) Rules 1989–ன் படியும், கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழக கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அரசு மதுபான சில்லறை விற்னைை கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள் மற்றும் FL3 உரிமம் உள்ள ஹோட்டல்கள், FL2 to FL11 (FL6 தவிர), ஆகியவைகள் தமிழ்நாட்டில் இரு கட்டங்களாக ஊரக உள்ளாட்சித்தேர்தல் நடைபெறும் நாட்களில் மூடப்படவேண்டும்.

அதனடிப்படையில், 25.12.2019 அன்று மாலை 5.00 மணி முதல் 27.12.2019 அன்று மாலை 5.00 மணி வரையிலும், 28.12.2019 அன்று மாலை 5.00 மணி முதல் 30.12.2019 அன்று மாலை 5.00 மணி வரையிலும் தேர்தல் நடைபெறும் ஊராட்சி ஒன்றியங்களில் அனைத்து மதுபானக்கடைகளும் மூடப்படவேண்டும். இந்த ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் இருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு மதுபானம் மற்றும் பீர் வகைகள் விற்பனை முடக்கம் செய்ய வேண்டும். இந்த 5 கிலோமீட்டர் சுற்றளவில் அருகில் உள்ள தேர்தல் நடக்காத ஊராட்சி ஒன்றியங்களின் பகுதிகளோ அல்லது அருகில் உள்ள மாவட்டத்தின் பகுதிகளோ இருந்தாலும் அங்கும் மதுபானக்கடைகள் மூடப்படவேண்டும். அதேபோல, வாக்கு எண்ணும் நாளான 02.01.2020 அன்று மாவட்டம் முழுவதும் மதுபானம் மற்றும் பீர் வகைகள் விற்பனை முடக்கம் செய்ய இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

விதிமுறைகளை மீறி விற்பனை செய்பவர்கள் மீது தமிழ்நாடு அரசு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003–ன் படியும், (Tamilnadu Liquor license and Permit) Rules 1989–ன் படியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**